**அமைதி, பாதுகாப்புக்கான உலக தலைவர் விருது**

# மாதா அமிர்தானந்தமயி தேவிக்கு பாராட்டு விழா

● சென்னை

மாதா அமிர்தானந்தமயி தேவிக்கு 2023-ம் ஆண்டுக்கான அமைதி மற்றும் பாதுகாப்புக்கான உலகத் தலைவர் விருது வழங்கப்பட்டுள்ளதற்காக, அவருக்கு பாராட்டு விழா நடைபெறுகிறது.

'அம்மா' என்று அழைக்கப்படும் மாதா அமிர்தானந்தமயி தேவிக்கு, பாஸ்டன் குளோபல் ஃபோரம் (பிஜிஎஃப்) மற்றும் மைக்கேல் டுகாகிஸ் இன்ஸ்டிடியூட் ஃபார் லீடர்ஷிப் அண்ட் இன்னோவேஷன் (எம்டிஐஐ) ஆகிய சர்வதேச அமைப்புகள் 2023-ம் ஆண்டுக்கான அமைதி மற்றும் பாதுகாப்புக்கான உலகத் தலைவர் விருதை வழங்கி கவுரவித்துள்ளன.

உலக அமைதி, ஆன்மிகம் மற்றும் கருணை ஆகியவற்றில் அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

அவரது ஆழ்ந்த ஆன்மிகம், அர்ப்பணிப்பு மற்றும் செல்வாக்கு மிக்க உலகளாவிய தலைமை ஆகியவை அவருக்கு இந்த மதிப்புக்குரிய பாராட்டைப் பெற்றுத் தந்துள்ளன.

இந்தியாவில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின்போது, ஜி-20



சிவில் சமூகத் தலைவர்களை உள்ளடக்கிய சிவில் 20 குழுவின் தலைவராகப் பணியாற்றிய அம்மா, 'நீங்கள்தான் வெளிச்சம்' என்ற ஜி-20 பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறார்.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டில் கடந்த ஜூலை 31-ம் தேதி, அவருக்கு இந்த விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த விருது பெற்றதற்காக அம்மாவை கவுரவிக்க வரும் அக். 3-ம் தேதி அவரது 70-வது பிறந்தநாள் விழா மற்றும் நவம்பர் 2-ம் தேதி ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் கிழக்கு லோப் ஹவுஸில் சிறப்பு மாநாடு ஆகிய 2 நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இதில் அவர் உரையாற்றுகிறார்.

---

### சுற்றுலாத் துறையை புதிய உச்சத்துக்கு உயர்த்த

# தமிழ்நாடு சுற்றுலா கொள்கை

### முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்

**சென்னை**

சுற்றுலாத் துறையில் தமிழகத்தை புதிய உச்சத்துக்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்ட 'தமிழ்நாடு சுற்றுலா கொள்கை'யை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சுற்றுலாத் துறை, வேலை வாய்ப்பு அளிப்பதுடன், அன்னியச் செலாவணியை ஈட்டுவதில் முக்கிய பங்காற்றுகிறது. தமிழகத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில், ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கு ஏற்ற இடமாக தமிழகத்தை உயர்த்துவது, சுற்றுலாப் பயணிகள் தங்கும் காலத்தை அதிகரிப்பது, அன்னியச் செலாவணியை ஈர்க்கும் வகையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையிலான வசதிகளை, கட்டமைப்புகளை அதிகப்படுத்தும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சுற்றுலா கொள்கையை நேற்று வெளியிட்டார்.

சுற்றுலாத் திட்டங்களுக்கு தொழில் அந்தஸ்து வழங்குவதன் மூலம், தொழில்துறை திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதே பலன்கள் சுற்றுலாத் துறைக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.

குறிப்பாக, சாகச சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, கேரவன் சுற்றுலா, கிராமப்புற மற்றும் தோட்ட சுற்றுலா, கடலோர சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, மருத்துவம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலா, ஆன்மிக சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, கூட்டங்கள், ஊக்கத் தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா மற்றும் திரைப்படச் சுற்றுலா ஆகிய 12 முன்னுரிமை சுற்றுலாப் பிரிவுகளின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கா.ராமச்சந்திரன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலாத் துறை செயலர் க.மணிவாசகன், இயக்குநர் சந்தீப் நந்தூரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

#### சென்னை புறநகரில் 100 ஏக்கரில் 'தீம் பார்க்'

தனியார் பங்களிப்பில் சென்னை புறநகரில் 100 ஏக்கரில், அமெரிக்காவில் உள்ள டிஸ்னி தீம் பார்க் போன்ற பூங்காவை அமைக்க சுற்றுலாத் துறை முடிவெடுத்துள்ளது. சர்வதேச முக்கியத்துவம் பெறும் வகையில் அமைக்கப்படும் இந்த மிகப்பெரிய பொழுதுபோக்கு பூங்காவில், அட்வென்ச்சர் ரைடிங், குழந்தைகளுக்கான விளையாட்டுகள், பொழுதுபோக்கு அம்சங்கள், செயற்கை நீர்வீழ்ச்சி, சர்வதேச கண்காட்சிகள், விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.

இதுகுறித்த தகவல்கள் சுற்றுலா கொள்கையில் இடம்பெற்றுள்ளன. அடுத்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# எங்கே இருக்கிறீர்கள், பெண் விஞ்ஞானிகளே?



**ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 11ஆம் தேதியை அறிவியலில் பெண்களுக்கான சர்வதேச தினமாக அறிவித்து ஐ.நா. அவையின் ஒப்புதலையும் பெற்றுள்ளது.**



ஆயிஷா இரா.நடராசன்
கல்வியாளர், எழுத்தாளர்.
தொடர்புக்கு: eranatarasan@yahoo.com

இந்தியாவின் உயரிய அறிவியல் விருதான சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதுகளை அறிவிக்காமல் அரசு நிறுத்திவைத்தது பலரின் கவனத்துக்கு வராத விஷயம். 250க்கும் மேற்பட்ட உள்நாட்டுப் பல்துறை அறிவியல் சாதனை விருதுகளை நிரந்தரமாகக் கலைத்துவிட்டதாகக்கூட அரசு அறிவித்தது. அனைத்தையும் சேர்த்து பாரத ரத்னா போல ஒற்றை விருது முறையே அறிவியலுக்கு உகந்தது என்றும் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

பத்ம விருதுகள்கூட குடியரசுத் தலைவரின் கைகளால் ஆண்டுக்கு 120 விருதுகள் வரை வழங்கலாம் என்று ஒரு விதி இருக்கிறது. இலக்கியம், மொழிபெயர்ப்பு என ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 60 பேருக்கு விருதுகளை சாகித்திய அகாடமி வழங்குகிறது. விளையாட்டுத் துறையை எடுத்துக்கொண்டால் கேல் ரத்னா விருதுகள், அர்ஜுனா விருது, துரோணாச்சார்யா விருது என 180 பேருக்கு மேல் ஆண்டுதோறும் கௌரவிக்கப்படுகிறார்கள். ஆனால், அறிவியல் துறைக்கு 2021க்குப் பிறகு எந்த விருதையும் அறிவிக்காமல் காலம் தாழ்த்திப் பல்வேறு நெருக்கடிகளுக்குப் பிறகு, 2022 பட்நாகர் விருதுகள் என்று சமீபத்தில் 12 பேருக்கு அறிவித்திருக்கிறார்கள். பட்டியலில் ஒருவர்கூடப் பெண் விஞ்ஞானி இல்லை என்பது பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

**இந்திய அறிவியலும் பெண்களும்:** சர்வதேச அளவில் இந்தியப் பெண் விஞ்ஞானிகள் பலர் சாதித்துள்ளனர். எனினும், சர் சி.வி.ராமன் தொடங்கி இந்திய விஞ்ஞானிகள் என்றாலே அது ஆண்பால்தான் என்றாகிவிட்டது மிகப் பெரிய துயரம். பெண்கள் ஆய்வாளர்கள் ஆவதா என்று புறக்கணித்த சி.வி.ராமனுக்கு எதிராகத் தனி ஒருவராகப் போராடி, பெங்களூருவின் இந்திய அறிவியல் ஆய்வு நிறுவனத்தில் இடம்பிடித்து, முனைவர் பட்டம் பெற்ற இந்தியாவின் முதல் பெண் எனும் பெருமையைப் பெற்றவர் கமலா சோஹோனி எனும் அறிவியல் போராளி. அவர் மட்டுமல்ல – நட்பவெப்ப அறிவியலின் ஏழு இந்திய வானியல் ஆராய்ச்சி (சென்னை உள்பட) நிறுவனங்களின் அடிப்படைக் கருவிகளைக் கண்டுபிடித்துக் கொடுத்த அன்னா மணி, உலக அளவில் இயற்பியல் துகளியலில் மிகப் பிரபலமாகி, தன் பெயரில் ஒரு நட்சத்திரத்தைக் கொண்டுள்ள பிபா சௌத்ரி, செயற்கைக் கருத்தரிப்பு முறையை உலகுக்கே கொடுத்த இந்திரா ஹிந்துஜா, நுண்கலைப் பொறியியல் மூலம் இந்திய ராணுவத்துக்கு 1950களில் ஆன்டனாக்களையும் வாக்கி டாக்கிகளையும் வழங்கிய முதல் இந்தியப் பெண் பொறியாளர் ராஜேஸ்வரி உள்ளிட்ட பல பெண் விஞ்ஞானிகள் நமது பாடப்புத்தகங்களில் இடம்பெற்றதில்லை.

உள்ளூர் ரோட்டரி, லயன்ஸ், அறிவியல் சங்க அங்கீகாரம்கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பெரும் போராட்டத்துக்குப் பிறகுதான், நமது சர்க்கரைக்கான உயர் கரும்பு ரகத்தை வழங்கிய – 'இனிப்பு ராணி' எனப் போற்றப்பட்ட – தாவரவியல் விஞ்ஞானி இ.கே.ஜானகி அம்மாவுக்குப் பத்மஸ்ரீ விருது 1977இல் வழங்கப்பட்டது.

**அதிர்ச்சி தரும் அம்சங்கள்:** இந்தியாவின் உயரிய அறிவியல் விருது, சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது. அது 1958இல் இந்திய அறிவியல்–தொழில் துறை ஆய்வு நிறுவனமான சிஎஸ்ஐஆர் மூலம், அதன் நிறுவனரின் பெயரில் உருவாக்கப்பட்டது. இந்தியாவிலேயே வாழ்ந்து, இங்கேயே அறிவியலின் மகத்தான கண்டுபிடிப்புகளை நிகழ்த்தும் விஞ்ஞானிகளை அங்கீகரிப்பதே இதன் நோக்கம்; விருதுத் தொகை ரூ.5 லட்சம். அதைத் தவிர, 65 வயதுவரை மாதம் ரூ.15,000 உதவித்தொகையும் உண்டு. ஒவ்வோர் ஆண்டும் சிஎஸ்ஐஆர் நிறுவன நாளான செப்டம்பர் 26 அன்று விருதுகளை அதன் இயக்குநர் அறிவிப்பதே வாடிக்கை. எம்.எஸ்.சுவாமிநாதன், சி.என்.ஆர்.ராவ் உள்பட இதுவரை 583 இந்திய விஞ்ஞானிகள் பட்நாகர் விருது பெற்றுள்ளார்கள். அதில் 19 பேர் மட்டுமே பெண்கள் என்பது அதிர்ச்சி தரும் உண்மை. இது 3%ஐ விடக் குறைவு.

விருது தொடங்கப்பட்டு 65 ஆண்டுகள் ஆகின்றன. தூய அறிவியலுக்கான இந்த ஒரே உயரிய அங்கீகாரம் ஆண்டுக்கு ஒரு பெண் விஞ்ஞானிக்காவது கிடைத்திருக்கக் கூடாதா என்று யோசிப்பது இருக்கட்டும்... மூன்று ஆண்டுகளுக்கு ஒரு பெண் விஞ்ஞானி என்றுகூடக் கணக்கிட முடியாதது எவ்வளவு பெரிய வெட்கக்கேடு! இந்தியாவில் அறிவியல் ஆய்வாளர்களாகப் பெண்களே இல்லையா என்ன?

**பெண் விஞ்ஞானிகளின் அவலநிலை:** 2023 மார்ச் 15 அன்று மாநிலங்களவையில் சமர்ப்பிக்கப்பட்ட புள்ளிவிவரத்தின் அடிப்படையில் இஸ்ரோ, சிஎஸ்ஐஆர் உள்பட இந்தியாவின் தேசிய அறிவியல் ஆய்வு நிறுவனங்களில், மொத்தம் 56,747 பெண் ஆய்வாளர்கள் உள்ளனர் (மொத்த ஆய்வாளர்களில் 16.6%). இதில் மருத்துவம், மரபணுவியல் உள்பட சுயநிதி அல்லது நிதியுதவி பெறும் தனியார் ஆய்வகங்களின் பெண் விஞ்ஞானிகளின் எண்ணிக்கை சேராது. எப்படி இருந்தாலும் இது உலக சராசரியான 33.8% பெண்கள் என்பதைவிட மிகக் குறைவானது. ஸ்டெம் (STEM) எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், கணிதம், பொறியியல் – இணைந்த அறிவியல் ஆய்வுத் திட்டம் இன்று சர்வதேச அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சந்ததி – சமத்துவ – இயக்கம் (Generation Equality Forum) எனும் உலகளாவிய அமைப்பு அறிவியல் தொழில்நுட்ப ஆய்வில் பாலினச் சமத்துவத்தை வலியுறுத்தி, ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 11ஆம் தேதியை அறிவியலில் பெண்களுக்கான சர்வதேச தினமாக அறிவித்து ஐ.நா. அவையின் ஒப்புதலையும் பெற்றுள்ளது.

இந்தியாவில் ஸ்டெம் அறிவியல் தொழில்நுட்பச் செயல்திட்டத்தில் 43% பெண்கள் உள்ளனர். இது ஜெர்மனி (27%), பிரிட்டன் (38%) ஏன் அமெரிக்காவைவிட (34%) அதிகம். ஆனால், நம் சமூக அமைப்புக்கே உரிய திருமணம், குழந்தைப் பேறு, குடும்பச் சூழல், ஆணாதிக்கப் பணியிடச் சூழல் போன்ற காரணங்களால் 16.6% பேர் மட்டுமே ஆய்வைத் தொடரும் நிலை. ஸ்டெம் சார்ந்த தொழில் துறை தலைமை நிர்வாக அதிகாரிகளாக 3% பெண்களே உள்ளனர் என்பது மற்றொரு அவலம். அதைவிடப் பெரிய அவலம், பெண் ஆய்வாளர்களின் உழைப்பை முற்றிலும் சுரண்டிவிட்டு, ஆய்வைத் தன்னுடைய பெயரில் வெளியிட்டு மோசடியில் ஈடுபடும் ஆண் 'விஞ்ஞானி'கள் உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம் என்று ஒரு கணக்கெடுப்பு சொல்கிறது. இந்நிலையில், விருதுகளிலும் பெண்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது வேதனை.

**தனி விருது தேவை:** புனேவில் தேசிய செல் (உயிரணு) அறிவியல் ஆய்வு மையத்தில் நினைவு சார்ந்த நோய், தோல் புற்றுநோய் என யாவற்றுக்கும் மையப்புள்ளியாக இயங்கும் குருத்தணு இழைய ஆய்வில் திருப்புமுனை வெற்றிகண்ட தீபா சுப்ரமணியம்; 2015இல் நாம் அனுப்பிய – இந்தியாவின் 'ஜேம்ஸ் வெப்' தொலைநோக்கி எனப் புகழப்படும் – அஸ்ட்ரோசாட் விண் தொலைநோக்கித் திட்டத்தில் பங்களித்த பெங்களூரு இந்திய வானியல் இயற்பியல் கழக இயக்குநர் அன்னபூரணி உள்படப் பலருக்கு இந்த ஆண்டு பட்நாகர் விருது எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்த எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது.

இந்நிலையில் ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி, இஸ்ரேல், சீனா உள்ளிட்ட நாடுகளில் இருப்பது போலப் பெண் விஞ்ஞானிகளின் சாதனைகளை அங்கீகரிக்கத் தனி விருதுகள் துறைவாரியாக ஏற்படுத்தப்படுவதே இந்த அவலநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும். நம் நாட்டில் ஒரு பெண் கல்வி கற்பதும், கல்லூரி செல்வதும், அதையும் கடந்து ஆய்வு மாணவி ஆகி முனைவர் பட்டம் பெறுவதும்கூட, கல்பனா சாவ்லா விண்வெளிக்குப் பறப்பதற்கு இணையான சாதனை என்பதே இன்றைய யதார்த்த நிலை. இதை மாற்ற அறிவுசார் பெருமக்கள் அனைவரும் கைகோக்க வேண்டும்! ●

# உயிர் பறிக்கும் உணவு: நிரந்தரத் தடுப்பு நடவடிக்கை அவசியம்

நாமக்கல் மாவட்டத்தில் ஷவர்மா என்னும் உணவுப் பண்டத்தைச் சாப்பிட்ட 14 வயதுச் சிறுமி உயிரிழந்திருப்பதும் 21 கல்லூரி மாணவர்கள் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டதும் அதிர்ச்சி அளிக்கிறது. அடுத்த சில நாள்களில், கிருஷ்ணகிரியில் உணவகம் ஒன்றில் 'சிக்கன் ரைஸ்' சாப்பிட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் 27 பேர், உணவு ஒவ்வாமை ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். உணவகங்களில் அவ்வப்போது நிகழும் இதுபோன்ற சம்பவங்கள், உணவுத் தரக் கட்டுப்பாடு குறித்த அழுத்தமான கேள்விகளை எழுப்புகின்றன. முந்தைய சம்பவங்களிலிருந்து அரசும் உணவகங்களும் மக்களும் பாடம் கற்காததையும் உணர்த்துகின்றன.

நாமக்கல்லில் ஏற்பட்ட உயிரிழப்பின் காரணமாக உணவக உரிமையாளர் உள்பட மூவர் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். உணவு மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், உணவகங்களில் தயாரிக்கப்படும் உணவு வகைகளில் உரிய நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்ற சோதனைகளும் ஆய்வுகளும் தமிழ்நாடு முழுவதும் உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகளால் இப்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் 355 கிலோ அளவுள்ள கெட்டுப்போன இறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது; பிற பகுதிகளிலும் கெட்டுப்போன இறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது. 2 ஷவர்மா கடைகள் உள்பட 3 உணவகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

ஆனால், இவை அனைத்தும் ஒரு மரணம் நிகழ்ந்துவிட்ட பிறகு மேற்கொள்ளப்படும் வழக்கமான நடவடிக்கைகளாகவே உள்ளன. கடந்த ஆண்டு கேரளத்தில் ஷவர்மா சாப்பிட்டு உயிரிழப்பு நிகழ்ந்த விவகாரம் தமிழ்நாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அப்போதும் ஷவர்மா கடைகளில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வுகளை மேற்கொண்டனர். பிரச்சினை வெடிக்கும்போது விழித்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பது போதாது. தொடர்ச்சியாக, குறிப்பிட்ட இடைவெளியில் உணவகங்களில் ஆய்வு நடைபெற வேண்டியது அவசியம்.

கேரள சம்பவத்தின்போது, அந்த ஷவர்மா கடையின் உணவு மாதிரிகளில் ஷிகெல்லா (Shigella), சால்மோனெல்லா (salmonella) பாக்டீரிய வகைகள் இருந்ததையும் அதுவே உயிரிழப்புக்குக் காரணம் என்பதையும் கேரள சுகாதாரத் துறை உறுதிப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக, மத்தியக் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த உணவாகக் கருதப்படும் ஷவர்மாவைத் தயாரித்தல், சேமித்தல், சுகாதாரத்தைப் பராமரித்தல் தொடர்பான வழிகாட்டுதலைக் கேரள உணவுப் பாதுகாப்புத் துறை வெளியிட்டது. தற்போது தமிழ்நாட்டிலும் அதிக அளவில் ஷவர்மா கடைகள் முளைத்திருக்கும் நிலையில், இதுபோன்ற உணவைத் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டுதல்களைத் தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டியது அவசியம்.

அதற்கு முன்பாக, தற்போது உயிரிழப்பு ஏற்பட்ட உணவகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட உணவு மாதிரிகளில் இருந்து கிடைக்கும் முடிவை வைத்து, அறிவியல் அடிப்படையில் விசாரணையை முடுக்கிவிட்டு, உணவில் கலந்திருந்த நச்சுப் பொருளின் மூலத்தைக் கண்டறிய அரசும் அதிகாரிகளும் முனைப்புக் காட்ட வேண்டும். உணவு தயாரிக்கும் இடம் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு சுகாதாரம் பேணப்பட வேண்டும். தரமான உணவுப் பொருளைப் பயன்படுத்துவதில் சமரசத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதற்கான விழிப்புணர்வை உணவக உரிமையாளர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அவை முழுமையாகப் பின்பற்றப்படுவதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும். இவ்விஷயத்தில் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம். பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் வெளியே ஆரோக்கியமான உணவை மட்டுமே சாப்பிடப் பழக்கப்படுத்த வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளை இணைந்து மேற்கொண்டால் மட்டுமே, உணவு விஷமாகி நிகழும் உயிரிழப்புகளைத் தடுக்க முடியும்.

EVA STALIN IAS ACADEMY

சொல்... பொருள்... தெளிவு

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் செப்டம்பர் 18 முதல் 22 வரை நடைபெறும் என ஆகஸ்ட் மாத இறுதியில் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் பிரகலாத் ஜோஷி அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து 'ஒரே நாடு.. ஒரே தேர்தல்', இந்தியாவுக்கு 'பாரத்' எனப் பெயர் மாற்றம் ஆகியவை குறித்தான விவாதக் கூட்டமாக இந்தச் சிறப்புக் கூட்டத்தொடர் இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் கூட்டத்தொடர் குறித்து அரசு வெளிப்படைத்தன்மையுடன் இல்லை என்றும் எதிர்க்கட்சிகள் விமர்சித்திருந்தன.

இந்நிலையில், வரலாற்றுச் சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றத்துடன் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் நடைபெற்று முடிந்துள்ளது.

**நாடாளுமன்றம் எப்போது கூட்டப்படுகிறது?** அரசமைப்பின்படி நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கு அழைப்புவிடுக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளது. அமைச்சரவைக் குழுவால் கூட்டத்தொடர் தொடர்பாக முடிவெடுக்கப்பட்டு, அது குடியரசுத் தலைவரால் முறைப்படுத்தப்படும்; பிறகு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தொடருக்கு அழைக்கப்படுகிறார்கள். அரசமைப்பின் 85ஆவது கூறு, நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பது/கலைப்பது பற்றி விவரிக்கிறது. அரசமைப்பில் நாடாளுமன்றக் கூட்டங்களுக்கு என்று நிலையான கால அட்டவணை எதுவும் இல்லை. இருப்பினும் குடியரசுத் தலைவர் ஆறு மாதங்களுக்கு ஒருமுறையாவது நாடாளுமன்ற அவைகளைக் கூட்ட வேண்டும் என்று அரசமைப்பு விதிகள் குறிப்பிடுகின்றன. அதன்படி ஆண்டுக்கு இரண்டு முறையாவது நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.

**பரிசீலனைகள்:** 1949இல், அரசமைப்புச் சட்டப்பிரிவு69 வரைவு, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மக்களின் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கக் கூடுதல் நேரம் ஒதுக்க நாடாளு மன்றத்தின் கூட்டங்களுக்கு இடையிலான இடைவெளியை மூன்று மாதங்களாக மாற்ற முன்மொழியப்பட்டது.

"ஆங்கிலேயர் காலத்தில் இருந்த காலச் சூழலின் அடிப்படையில்தான் நாடாளுமன்றத்துக்கான வரைவுச் சட்டங்கள் அமைக்கப்பட்டன. நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான நிதி அனுமதி பெறுவதற்காக மட்டுமே சபைகள் அப்போது அழைக்கப்பட்டன. ஆனால் நாட்டின் வளர்ச்சி, எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான சட்டங்களைப் பரிசீலனை செய்வதற்கும் விவாதிப்பதற்கும் நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள் முக்கியமானவை. இதில் சரியான பரிசீலனையை அனுமதிப்பதற்கு நேரமும் ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது. எனவே, நாடாளுமன்றக் கூட்டங்களுக்கு இடையேயான இடைவெளி மூன்று மாதங்களுக்கு மிகாமல்




இருக்கப் பரிந்துரைக்கிறேன்" என நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள் போதிய இடைவெளியுடன் ஆண்டு முழுவதும் நடைபெற வேண்டியதன் அவசியம் குறித்து, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான கே.டி.ஷா கூறினார்.

மறைந்த மற்றுமொரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஹெச்.வி.காமத், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளைச் சுட்டிக்காட்டி, நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள் நீண்ட காலம் நடைபெறுவதற்கு வலியுறுத்தினார். எனினும், இவர்களது பரிந்துரைகள் ஏற்கப்படவில்லை.

"அரசமைப்பு விதிகள் நாடாளுமன்றம் அவ்வப்போது கூட்டப்படுவதைத் தடுக்காது. எனினும், கூட்டத்தொடர்கள் அடிக்கடி நடக்கும்போது உறுப்பினர்கள் சோர்வடைந்துவிடுவார்கள் என்பதே அச்சம்" என அம்பேத்கர் கூறியது இங்கு நினைவுகூரத்தக்கது. இந்தப் பரிசீலனைகளின் இறுதியில், நாடாளுமன்றத்தின் இரண்டு கூட்டத்தொடர்களுக்கு இடையே ஆறு மாத இடைவெளி இருப்பதே முடிவாகத் தக்கவைக்கப்பட்டது.

**நிலையான கால அட்டவணை உள்ளதா?** நாடாளுமன்றக் கூட்டத்தொடர்களுக்கு நிலையான கால அட்டவணை கிடையாது. இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் மூன்று முறை நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள் நடத்தப்படுகின்றன. அவை நிதிநிலை (பட்ஜெட்), மழைக்கால, குளிர்காலக் கூட்டத்தொடர்கள். இதில் நிதிநிலைக் கூட்டத்தொடர் நீண்ட நாள்கள் நடைபெறுவது; அது ஜனவரி இறுதியில் தொடங்கி ஏப்ரல் இறுதிக்குள் முடிவடைகிறது. அதைத் தொடர்ந்து மழைக்காலக் கூட்டத்தொடர் ஜூலையில் தொடங்கி ஆகஸ்ட்டில் நிறைவடைகிறது. குளிர்காலக் கூட்டத்தொடர் பொதுவாக நவம்பர் முதல் டிசம்பர் வரை நடைபெறும்.

**சிறப்புக் கூட்டத்தொடர் எப்போது நடத்தப்படுகிறது?**

சிறப்புக் கூட்டத்தொடர் என்கிற சொல், அரசமைப்புச் சட்டத்திலோ நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளின் விதிப் புத்தகங்களிலோ வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை. அத்தகைய சிறப்புக் கூட்டத்தொடரை எப்படி, எப்போது கூட்டலாம் என்பதற்கான குறிப்பிட்ட வழிகாட்டுதல்களும் அரசமைப்பில் இல்லை. எனினும், நெருக்கடிநிலைப் பிரகடனத்தைக் கையாளும் சட்டக்கூறு 352, நாடாளுமன்ற அவையின் சிறப்புக் கூட்டத்தொடர் குறித்துக் குறிப்பிடுகிறது. மேலும், நாட்டின் நலனுக்காக நள்ளிரவுக் கூட்டத்தொடர் உள்பட பல சிறப்புக் கூட்டத்தொடர்கள் கூட்டப்படுகின்றன.

**கடந்த காலங்கள்:** 1947இல் சுதந்திர நாளன்று ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவுக்கு அதிகாரம் மாற்றப்பட்டதைக் குறிக்கும் வகையில், நாட்டின் முதல் சிறப்புக் கூட்டத்தொடர் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து 1962இல் இந்திய–சீனப் போரின்போது சீன ஆக்கிரமிப்பு குறித்து விவாதிக்கச் சிறப்புக் கூட்டத்தொடர் நடைபெற்றது.

சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் ஆகஸ்ட் 1972இல், அன்றைய அரசு சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டியது. 1977இல், தமிழ்நாடு, நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிப்பதற்காகவும் 1991இல் ஹரியாணாவில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு ஒப்புதல் அளிக்கவும் சிறப்புக் கூட்டத்தொடர் கூட்டப்பட்டது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 50ஆம் ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில், 1992இல் நள்ளிரவு சிறப்புக் கூட்டத்தொடருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில், 1997 ஆகஸ்ட் மாதம் ஆறு நாள் சிறப்புக் கூட்டத்தொடர் நடைபெற்றது.

2008இல், மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து இடதுசாரிகள் வெளியேறியதை அடுத்து, மக்களவையில் நம்பிக்கை வாக்கெடுப்புக்காகச் சிறப்புக் கூட்டத்தொடர் கூட்டப்பட்டது.

சமீபத்திய ஆண்டுகளில் 2017 ஜூன் மாதத்தில் பாஜக தலைமையிலான அரசு, சரக்கு மற்றும் சேவை வரியை (ஜிஎஸ்டி) அறிமுகப்படுத்த நாடாளுமன்றத்தில் நள்ளிரவுக் கூட்டத்தொடரைக் கூட்டியது. 2023 செப்டம்பர் 18 முதல் 22 வரை நடைபெற்ற கூட்டத்தொடர், பாஜக அரசு கூட்டிய இரண்டாவது சிறப்புக் கூட்டத்தொடர் ஆகும். இந்தக் கூட்டத்தொடர் கேள்வி நேரம், பூஜ்ய நேரம் இல்லாமல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தொகுப்பு: இந்து குணசேகர்**

EVA STALIN

# குதிரையேற்றத்தில் தங்கம் வென்றது இந்தியா

**● 41 வருடங்களுக்குப் பிறகு சாதனை**

● **ஹாங்சோ**

சீனாவின் ஹாங்சோவில் 19-வது ஆசிய விளையாட்டு போட்டி நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற குதிரையேற்ற பந்தயத்தின் டிரஸ்ஏஜ் பிரிவில்ஹிருதய் சேடா, திவ்யகிருதி சிங், அனுஷ் அகர்வாலா, சுதிப்தி ஹஜேலா ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 209.205 புள்ளிகளுடன் தங்கப் பதக்கம் வென்றது. சீனா (204.882) வெள்ளிப் பதகக்கமும், ஹாங் காங் (204.852) வெண்கலப் பதக்கமும் பெற்றன.

ஆசியவிளையாட்டுகுதிரைபந்தயத்தில் இந்திய அணி 41 வருடங்களுக்குப் பிறகு தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்னர் 1982-ம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியா 3 தங்கப் பதக்கம் வென்றிருந்தது. ரகுபிர் சிங், ஈவன்டிங் தனிநபர் பிரிவில் தங்கம் வென்றிருந்தார். ஈவன்டிங் அணிகள் பிரிவிலும் இந்திய அணி தங்கம் வென்றிருந்தது. அதேவேளையில் டென்ட் பெக்கிங்கில் ரூபிந்தர் சிங் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.



↑ ஆசிய விளையாட்டு போட்டி குதிரையேற்றத்தில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியினர்.

**நேகா தாக்குர்**

படகு போட்டியில் மகளிருக்கான டிங்கி- ஐஎல்சிஏ 4 பிரிவில் இந்தியாவின் நேகா தாக்குர் 27 புள்ளிகளுடன் 2-வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றார். ஆடவருக்கான விண்ட்சர்ஃபர் ஆர்எஸ்எக்ஸ் பிரிவில் இந்தியாவின் இபாத் அலி 52 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

**கால் இறுதியில் அங்கிதா**

டென்னிஸ் போட்டியில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவு 3-வது சுற்றில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா 6-1,6-2 என்ற நேர் செட் கணக்கில் ஹாங் காங்கின் ஆதித்ய பி கருணாரத்னேவை வீழ்த்தினார். கால் இறுதி சுற்றில் அங்கிதா ரெய்னா ஜப்பானின் ஹருகா கஜியுடன் மோதுகிறார். மற்றொரு இந்திய வீராங்கனையான ருதுஜா போஸ்லே 3-வது சுற்றில் 6-7(5), 2-6 என்ற செட் கணக்கில் பிலிப்பைன்ஸின் அலெக்ஸாண்ட்ரா ஈலாவிடம் தோல்வி அடைந்தார்.

ஆடவருக்கான ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ராம் குமார் ராமநாதன், 5-7, 7-6, 5-7 என்ற செட் கணக்கில் 2 மணி நேரம் 40 நிமிடங்கள் போராடி ஜப்பானின் ஷிசுகே வதனுகியிடம் தோல்வி அடைந்தார். அதேவேளையில் மற்றொரு இந்திய வீரரான சுமித் நாகல் 7-6(9), 6-4 என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் பெய்பிட் ஜுகேவை வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

**ஸ்குவாஷில் அசத்தல்**

ஸ்குவாஷில் 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ள இந்தியமகளிர் அணி தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை 3-0 என்ற கணக்கில் வீழ்த்தியது. இந்திய அணி சார்பில் அனாஹத் சிங், ஜோஷ்னா சின்னப்பா, தன்வி கன்னா ஆகியோர் வெற்றியை பதிவு செய்தனர். ஆடவர் பிரிவில் இந்திய அணி 3-0 என்ற கணக்கில் சிங்கப்பூரை தோற்கடித்தது. ஹரிந்தர் பால் சிங், சவுரவ் கோஷல், அபய் சிங் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

**பவானி தேவி ஏமாற்றம்**

வாள்வீச்சில் சேபர் தனிநபர் பிரிவு கால்இறுதிசுற்றில் இந்தியாவின்பவானி தேவி, சீனாவின் யாகி ஹவோவுடன் மோதினார். இதில் பவானி தேவி 7-15 என்ற கணக்கில் தோல்வி அடைந்தார்.

**வாலிபாலில் 6-வது இடம்**

ஆடவருக்கான வாலிபாலில் 6-வது இடத்துக்கான ஆட்டத்தில் இந்திய அணி நேற்று பாகிஸ்தானை எதிர்த்து விளையாடியது. இதில் இந்திய அணி 0-3 என்ற கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தது. ஒரு மணி நேரம் 14 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 25-21,25-20,25-23 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

**ஹாக்கியில் அபாரம்**

ஆடவருக்கான ஹாக்கியில் இந்திய அணி நேற்று சிங்கப்பூருடன் மோதியது. இதில் இந்திய அணி 16-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்திய அணி சார்பில் கேப்டன் ஹர்மன்பிரீத் சிங் 4 கோல்களும் (24, 39, 40, 42-வது நிமிடங்களில்), மன்தீப் சிங் 3 கோல்களும் (12, 30, 51-வது நிமிடங்கள்), அபிஷேக் (51, 52-வது நிமிடங்கள்), வருண் குமார் (55, 56-வது நிமிடங்கள்) ஆகியோர் தலா 2 கோல்களும் லலித் குமார் உபாத்யாய் (16-வது நிமிடம்), குர்ஜாந்த் சிங் (22-வது நிமிடம்), விவேக் சாகர் பிரசாத் (23-வது நிமிடம்), மன்பிரீத் சிங் (37-வது நிமிடம்), ஷம்ஷெர் சிங் (38-வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர். இந்திய அணிக்கு இது 2-வது வெற்றியாக அமைந்தது. முதல் ஆட்டத்தில் இந்திய அணி 16-0 என்ற கோல் கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றிருந்தது. இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் நாளை (28-ம் தேதி) ஜப்பானுடன் மோதுகிறது.

## பிரதமர் வாழ்த்து

ஆசிய விளையாட்டு குதிரையேற்றத்தின் டிரஸ்ஏஜ் அணிகள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணிக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர், எக்ஸ் பதிவில், "பல தசாப்தங்களுக்குப் பிறகு, நமது குதிரையேற்ற அணி ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்றுள்ளது மிகவும் பெருமைக்குரியது. ஹிருதய் சேடா, அனுஷ் அகர்வாலா, சுதிப்தி ஹஜேலா மற்றும் திவ்யகிருதி சிங் ஆகியோர் இணையற்ற திறமை, குழுப் பணியை வெளிப்படுத்தி சர்வதேச அரங்கில் நம் நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளனர். இந்த வரலாற்று சாதனைக்காக இந்திய அணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 53 | 29 | 13 | **95** |
| கொரியா | 14 | 16 | 19 | **49** |
| ஜப்பான் | 8 | 20 | 19 | **47** |
| உஸ்பெகிஸ்தான் | 5 | 6 | 11 | **22** |
| ஹாங்காங் | 5 | 4 | 10 | **19** |
| இந்தியா | 3 | 3 | 6 | **12** |